# தோஷங்கள் நீக்கும் புனிதபுராதன சிவஸ்தலம்

# முன்னேஸ்வரம்

இலங்கையின் புராதன சிலஸ்தலம் முன்னேஸ்வரம்.இச்சிவஸ்தலம் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியங்களையும்,இதிஹாச புராணச் சிறப்புக்களையும் கொண்டது.சிவசக்தி ஐக்கியத்தலமாக மிகப் பிரமாண்டமான கருவறையில் ஸ்ரீவடிவாம்பிகையுடன் ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் சர்வ சாந்நித்தியராக உறைந்து அருள்பாலித்த வண்ணம் இருக்கின்றார்.

பஞ்ச ஈஸ்வரங்களும் முந்திய இச்சிவத்தலத்தை பிரம்மா,தேவேந்திரன் போன்றோர் வழிபட்ட சிறப்புடையது. பிரம்மா பூஜித்த சிறப்பினால் சுயம்பு மூர்த்தியாகவும் விளங்கும் இம்முன்னேஸ்வரம்,முன்னேஸ்வரம் எனும் ஸ்தலச்சிறப்பையும்; புராதனமான முன்னைநாத சுவாமி எனும் மூர்த்திச் சிறப்பையும்; மாயவனாறு (தெதுறுஓயா) எனும் தீர்த்தச் சிறப்பையும்; புராதன அரசமரத்தை ஸ்தலவிருட்சமாகக் கொண்ட சிறப்பையும்; வியாசகர்,இராமபிரான் போன்ற மகான்கள் தோத்திரம் செய்த சிறப்பையும் உடையதாக சித்தர்களும் முனிவர்களும் தவமும் வேள்வியும் வழிபாடும் ஆற்றிய சிறப்புமிக்க ஸ்தலமாக விளங்குகின்றது.

இலங்கையின் பூர்வீக வரலாற்றுக் குறிப்புக்களின் படியும்,இதிகாசங்களுள் இராமாயணத்தின் தொடர்புகளின் படியும்,புராணங்களும்,சிவபுராணம், ஸ்காந்தபுராணம், பத்மபுராணம், மத்யபுராணம், மார்க்கண்டேய புராணம் ஆகியனவற்றின் தொடர்புகளூடாகவும்; சாக்ததந்திரங்களில் குப்ஜிகா தந்திரம் என்னும் தந்திர சாஸ்திரத்தின் தொடர்பினூடாகவும்; இலங்கையை ஆண்ட மன்னர்களது குறிப்புகள் ஊடாகவும்; சாசனங்கள், செப்பேடுகள் ஊடாகவும்; பாரம்பரியம் மிக்க ஐதீகக் கதைகள் ஊடாகவும்; போர்த்துக்கேயரின் அறிக்கைக் குறிப்புக்களின் ஊடாகவும்; தமிழ்ப்புலவர்களது திருவருட்பாடற் சிறப்புக்களினூடாகவும் முன்னேஸ்வரத் திருத்தலத்தின் வரலாறு பாரம்பரியம் உடையதாக விளங்குகின்றது.

இத்தகைய பாரம்பரியமுடைய இச் சிவஸ்தலம் அமைவிட முக்கியத்தாலும் சிறப்பாக தலவிருட்சம்,திருக்குளம், அதற்கு நேரே சுடலை (மயானம்) என்பவற்றை நேர்கோட்டில் கொண்ட சிறப்பினாலும் சூரியஒளி மாசிமாதத்திலும், ஆவணிமாதத்திலும் நேரே ஒளிகாணுகின்ற சிறப்புத்தன்மையோடும் விளங்கும் சிறப்புடையது. இவற்றிற்கு மேலாக சிறந்த சிவாச்சாரிய பாரம்பரியமுடைய சிவாச்சாரியார்களின் மந்திர உச்சடனங்களுடன் கூடிய பிரதிஷ்டைகள், ஆராதனைகள், இடையறாது நடைபெற்றுவரும் நித்திய நைமித்திய வழிபாட்டு மரபுகள் என்பன ஸ்ரீ முன்னைநாதப் பெருமானின் சாந்நித்தியத்திற்கு பெருமையும் மெருகூட்டுவனவாக விளங்குகின்றன.

வுரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியச் சிறப்பும், அமைவிடச் சிறப்பும் கொண்ட முன்னேஸ்வரத்தில் வியாசமகா முனிவர், ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்தி, ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னன், சிவஸ்ரீ நா.குமாரசுவாமி குருக்கள் ஆகியோர் தோஷநீக்கம் பெற்ற சிறப்புக்களையுடையது. இதன் சிறப்புக்களையும், மகிமைகளையும் நோக்குவோம்.

வியாச மஹாமுனிவர் சர்வ சாஸ்திரங்களையும் அறிந்தவர். வேதங்களைத் தொகுத்தவர். இதிஹாசங்களுள் மஹாபாரதத்தை வாய்பீடமாகச் சொல்ல கைலயங்கிரியில் விநாயகர் எழுந்தருளிய சிறப்புப் பெற்றவர். புதினெண் மஹாபுராணங்களின் ஆசிரியர். இத்தகைய பெருமையுடைய வியாசமஹாமுனிவர் 'வேதசாஸ்திரங்களில் உள்ளுறை இறைவன் விஷ்ணுவே' வேறு எவருமில்லை எனக் கூறியதைக் கேள்வியுற்ற முனிவர்கள் இவ்வுண்மையை காசிவிஸ்வநாதர்

சந்நிதியில் கூறவேண்டும் எனக் கேட்டுக்கொள்ள விஷ்ணுவே பரம்பொருள் என கூற நந்தியெம்பெருமான் உயர்த்தியே கை நிலைபெறுமாறு சாபம் அளித்தார்.அச்சாபத்தை நீக்கும் பொருட்டு நந்தியெம் பெருமானின் கட்டளைப்படியே மகிமையும் பெருமையும் மிக்க முன்னேஸ்வரத்தில் சாபவிமோசனம் பெற்ற சிறப்பு ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தின் பதினாறாம் அத்தியாயம் முழுவதும் கூறுவது குறிப்பிடத்தக்கது. இவ் அத்தியாயத்தில் 151 சுலோகங்களினூடாக மிக விரிவாக இக்கதை விபரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

விஷ்ணுவின் அவதாரங்களுள் ஒன்றாகச் சுட்டப்படுவது இராம அவதாரமாகும்.இராமனின் வரலாற்றைக் கூறும் இதிஹாசம் இராமாயணம் ஆகும். இராமாயணத்தில் இராம அவதார நோக்கம் இராவண சம்ஹாரமாக அமைகின்றது. இதன்படி சிவபக்தனாகிய இராவணனை ராமபாணம் கொண்டு சம்ஹாரம் செய்ததன் காரணமாகவும், விஸ்ரவச முனிவரின் மகன் இராவணன் என்பதாலும் இராவணனைச் சம்ஹாரம் செய்ததால் இராமனுக்கு 'பிரம்மஹத்தி தோஷம்' ஏற்பட்டது. அப்பிரம்மஹத்தி தோஷம் நீக்கப்பெற்ற சிவஸ்தலமே முன்னேஸ்வரம் ஆகும். இப்பிரம்மஹத்தி தோஷ நிவர்த்தியின் விரிவான கதையினை ஸ்ரீமத்தக்ஷிணகைலாச மஹாத்மியத்தியத்தின் 17ம் அத்தியாயம் முழுவதும் மிக விரிவாக கூறுகின்றது. இவ் அத்தியாயத்தில் 44 சுலோகங்கடீளூடாக மிக விரிவாக விபரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களுள் ஒருவன் 9ம் பராக்கிரமபாகு மன்னன் ஆவான்.கலிகால சர்வக்ஞ பண்டிதர் எனும் சிறப்புப் பெயர் பெற்ற இம்மன்னனது மகனும் அரசிளம் குமாரனுமாகிய ஷண்பக குமாரனுக்கு மின்னலால் ஏற்பட்ட சித்தசுயாதீன நிலையை ஸ்ரீ முன்னைநாத சுவாமிக்கும் ஸ்ரீ மஹா விஷ்ணு பெருமானுக்கும் யாகம் முதலான வழிபாடுகள் மூலம் குணமாகியமையினால் முன்னேஸ்வர தலத்தின் மகிமையை அறிந்தும் இறைவனின் திருவருளாள் வியந்தும் சிவநிலங்களை மானியமாக தாமிர சாசனம் செய்து கொடுத்தான். இவ்விபரம் 'ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியத்தில்' இடம்பெறுகின்றது.

வேதாகமங்களில் பாண்டித்தியம் உடையவரும், திருக்கணித சிங்களமொழிமூல பஞ்சாங்கத்தை கணித்து முதன்முதலில் வெளியிட்டவரும் காஞ்சீபுரத்தை பூர்வீகமாகக் கொண்டவரும், பண்டித சிரோமணியும், பல ஆலயங்களில் பிரதிஷ்டை உற்சவம் முதலானவற்றை செய்தவருமாகிய பிரம்மஸ்ரீ நா.குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு தினமும் உடலின் இயல்பு குன்றும் கொடிய நோய் பல தலயாத்திரை செய்தும் குணமாகாத நிலையில் கனவிற் தோன்றி இவ்வாலயத்திற்கு அழைத்து நோய் நீக்கப் பெற்ற சிறப்பு தனித்துவமானது. இவரின் பெரும் முயற்சியாலேயே காடுடர்ந்த இவ்வாலயம் மீண்டும் புதுப்பொழிவு பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இதன் விபரம் ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே போன்று சொல்லொனாத் துன்பங்களையும், துயரங்களையும் சர்வசாந்நித்தியராக விளங்கும் சிவசக்தியின் திருவருளால் சந்நிதிப்படுதல் மூலமே நீக்கப்பெற்ற சிறப்புடையோர்கள் பலர். அவர்களள் இம்முன்னேஸ்வரத்தின் கீர்த்தி, மேன்மை, திருவருள் என்பவற்றை நன்கு அறிவர்.

பல்வேறுபட்ட மகிமைகள், பெருமைகள், மேன்மைகள் கொண்டு என்றும் தாம் விரும்பியுறைந்து மனம் குழைந்து உருகி வேண்டும் அடியவர்களுக்கும், தாம் தமது சந்நிதிப்படும் அடியவர்களுக்கும், நினைப்பவர்களுக்கும், தியானம் செய்பவர்களுக்கும், நல்வழி நிற்போருக்கும், பெருமை உணர்ந்தோருக்கும், எளியவர்களுக்கும் காலத்திற்கு காலம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் அவர்களுக்கு ஏற்பட்ட அனைத்து தோஷங்களையும் நீக்கி அனுக்கிரகித்து ஆசிர்வதிக்கின்றார். நாமும் எமக்கு கிரகங்களாலும் மற்றும் பூர்வஜென்மத்தில் செய்த செயல்களாலும், எண்ணங்களாலும் செய்த பல்வேறு விதமான தோஷங்களும் எத்தகைய தோஷங்களையும் நீக்கப்பெற்று இறைவனின் திருவருளைப் பெற்றுய்வோமாக!